**உதயன்**

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி 19 வெள்ளிக்கிழமை (02-04-1999) UTHAYAN Lively National Tamil Daily கதிர் 108

# செம்மணியில் புதைகுழிகள் ஜூன் 16இல் தோண்டப்படும்

## கோப்ரல் சோமரத்தின ராஜபக்ஷ யாழ்ப்பாணம் அழைத்துவரப்படுவார்

கொழும்பு, ஏப்ரல் 2

சுமார் நானூறுக்கும் அதிகமானவர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் செம்மணி மனிதப் புதைகுழிகள் எதிர்வரும் ஜூன் 16 ஆம் திகதி நீதிவான் முன்னிலையில் தோண்டப்படவிருக்கின்றன.

புதைகுழிகள் இருப்பதாகக் கருதப்படும் இடங்களை அடையாளம் காட்டுவதற்காக முன்னாள் இராணுவக் கோப்ரல் சோமரத்தின ராஜபக்ஷ பலத்த பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவார்.

இது தொடர்பான உத்தரவுகளை யாழ். மேலதிக நீதிவான் என் அருள்சாகரன் நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் விடுத்தார்.

செம்மணிப் புதைகுழி விசாரணை தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் தாக்கல் செய்திருந்த மனு கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் யாழ். மேலதிக நீதிவான் என். அருள்சாகரன் முன்னிலையில் நேற்று நண்பகல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரச தரப்பில் அரச சட்டத்தரணி ஜசந்த கோத்தாக்கொட, குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பிரிவுப் பணிப்பாளர் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பந்து கீர்த்தி கஜநாயக்க, பொலீஸ் அத்தியட்சகர் தீபால் தல்பதாது, சட்ட மருத்துவ மண்ணியல் நிபுணர்கள் ஆகியோர் ஆஜரானார்கள்.

பாதிக்கப்பட்டோரின் நலன்களைக் கவனிக்க மனித கௌரவத்துக்கான அமைப்பின் சட்டத்தரணிகள் செல்வி மகேஸ்வரி வேலாயுதம், டேவிட் இரட்ணவேல், மனோகரி விஜயவர்த்தன ஆகியோரும் ஆஜரானார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலில் 8 பொது மக்கள் காயம்

மட்டக்களப்பு, ஏப்ரல் 2

அம்பாறை மாவட்டம் இக்கினியாகலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு படையினர் மேற்கொண்ட தாக்குதலில் எட்டுப் பொது மக்கள் காயம் அடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### உயிலங்குளம் பகுதியில்

## படையினரின் முகாமை நோக்கி ஷெல் வீச்சு!

வவுனியா, ஏப்ரல் 2

மன்னார் — உயிலங்குளம் பகுதியில் உள்ள படையினரின் தடை முகாமை நோக்கி நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலால் ஏற்பட்ட சேதம் குறித்துத்தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலை அடுத்து அந்தப்பகுதியில் படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர் என்று கூறப்பட்டது. (இ-3-7)

## ரெலோ செயலாளர் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 2

விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட தங்கத்திலானகுற்றிகளைவைத்திருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரெலோ அமைப்பின் செயலாளர் என். விநோதலிங்கம் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் செல்லநேற்று கொழும்பு மஜிஸ்திரேட் நீதிவான் மேர்வின் காமினி விஜயதுங்கவால் அனுமதிக்கப்பட்டார்.

விநோதலிங்கம் அவரது மனைவியுடன் தேவாலயம் ஒன்றுக்குச் சென்ற சமயம் அவரது மனைவியின் தாலிக் கொடியில் இருந்த தங்கத்திலான குற்றிகள் தவறி வீழ்ந்தன என்றும்—

புலிகள் சின்னம் பொறிக்கப்பட்ட அந்த குற்றிகள் பின்னர் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன என்றும் —

அது தொடர்பாக விநோதலிங்கம் கடந்த மாதம் 15 ஆம்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## இலங்கைகரைக்கு அப்பால் இரு கப்பல்கள் மோதின

### 37 பேரைக் காணவில்லை

கொழும்பு, ஏப்ரல் 2

காலித் துறைமுகத்தில் இருந்து சுமார் 375 கடல் மைல் தூரத்தில்— சர்வதேச கடற்பரப்பில் — சென்று கொண்டிருந்த இரு தென் கொரியக் கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதின. இந்த விபத்தில் ஒரு கப்பல் கடலில் மூழ்கியது; அந்தக் கப்பலில் இருந்த 37 மாலுமிகள் குறித்து தகவல் எதுவும் இல்லை.

மூழ்கிய கப்பலை மீட்டுக் கொழும்புக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கப்பலில் இருந்து காணாமற் போனவர்களைத் தேடும் பணியை இந்திய விமானப்படை மேற்கொண்டுள்ளது. [இ-3 6]

## குடாநாட்டில் மற்றொரு எய்ட்ஸ் நோயாளி மரணம்

### தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

யாழ். குடாநாட்டில் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் என உறுதிப் படுத்தப் பட்டவர்களில் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த இவர் 1998 ஆம் ஆண்டு மே மாதம் அளவில் மிகமோசமான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக் குட்படுத்தப்பட்டார்.

ஆஸ்பத்திரி ஆய்வு கூடத்திலும் கொழும்பு ஆய்வு கூடத்திலும் மேற்கொள்ளப்பட்ட எய்ட்ஸ் பரிசோதனைகள் மூலம், எய்ட்ஸ் நோயாளி என இவர் உறுதிப்படுத்தப்பட்டார்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் வீட்டுக்குச் சென்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைச் சம்பவங்கள்

கொழும்பு, ஏப்ரல் 2

அடுத்த வாரம் முற்பகுதியில் தெற்கில் நடைபெறவிருக்கும் ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்களை முன்னிட்டு இதுவரை 800 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

## மூன்று பிரதேசங்களில் மண் குழப்பப்பட்டுள்ளது

### மண்ணியல் நிபுணர்கள் அறிக்கை

கொழும்பு, ஏப்ரல் 2

செம்மணிப் பிரதேசத்தில் புதைகுழி இருப்பதாகக் கூறப்படும் பகுதியில் மண் அமைப்பு இயற்கை நிலையில் இல்லை. மூன்று பிரதேசங்களில் மண் குழப்பப்பட்டுள்ளது; மாற்றப்பட்டுள்ளது ஆகவே அங்கு இடையில்— அதாவது அண்மைக்காலத்தில்—தவறான நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறவில்லை என்று உறுதியாகக் கூறமுடியாதுள்ளது.

செம்மணியில் புதைகுழி இருப்பதாகக் கருதப்படும் பிரதேசத்தில் எடுக்கப்பட்ட மண் மாதிரிகளை பரிசோதனை செய்தமண்ணியல் நிபுணர்கள் மேற்கண்டவாறு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் செம்மணி தொடர்பான விடயம் நேற்று யாழ். மேலதிக நீதிவான் ஏன். அருள்சாகரன் முன்னிலையில் எடுக்கப்பட்ட சமயம் சமர்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவச் சிப்பாய்களினால் படுகொலை செய்யப்பட்டபின்னர்புதைக்கப்பட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் விசாரிப்பதற்கு சட்டத்தரணிகள் எதிர்ப்பு

கொழும்பு, ஏப்ரல் 2

செம்மணிப் புதை குழிகள் தொடர்பான விசாரணை கொழும்பு நீதிமன்றத்தில் நடத்தப்படுவதற்குப் பாதிக்கப்பட்டோரின் நலன்களைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணிகள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

செம்மணிப் புதைகுழிகள் தொடர்பான மனு மீதான விசாரணை நேற்றுக் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் அவர்கள் இந்த ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட இந்த விவகாரம் கொழும்பில் விசாரிக்கப்படுவது முறையற்றது என்று

என்றாலும் இந்த விடயத்தை விசாரிக்கும் மேலதிக நீதிவான் அருள்சாகரன் கொழும்பு மேலதிக நீதிவானாகவும் யாழ்ப்பாண மேலதிக நீதிவானாகவும் பணிபுரிவதால் தமது ஒரு நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட விடயத்தைத் தனக்குரிய மற்றொரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில்தமிழர்களின் காணி பறிபோகும் நிலை

### நகரசபை கூட்டத்தில்கவலை

திருகோணமலை, ஏப்ரல்2

திருகோணமலை நகரசபையின் நிர்வாகத்தை பிரதேச செயலரிடம் ஒப்படைப்பதன் மூலம் தமிழ் மக்கள் தமது நிலங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று திருமலை நகரசபை கவலை தெரிவித்துள்ளது.

திருமலை நகர சபையின் இறுதிக் கூட்டம் நேற்று அதன் தலைவர் எஸ். சூரியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற சமயம் இது தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தில் தெரிவிக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## வ. தம்பு

தொண்டமானாறு, மயிலியதனையைச் சேர்ந்த வ. தம்பு அவர்கள் 31-03-99 அன்று காலமானார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும் இராசம்மா, பரணி ஆகியோரின் சகோதரரும் ஜெயதேவன் (பிரதம சுருக்கெழுத்தாளர், சட்டமா அதிபர் திணைக்களம்), மகேஸ்வரி (ஆசிரியை, அ.த.க பாடசாலை, கம்பர்மலை), கேதீஸ்வரி (ஆசிரியை, வல்வை சிதம்பராக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வேந்திரன் (இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), நகுலேஸ்வரன் (இளைப்பாறிய மீன் அத்தியட்சகரும் முன்னாள் சைக்கிள் சவாரி சம்பியனும்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபிநந்தன், அகிலா, சோபா, கேதாரகௌரி, கார்த்திகேயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
**நகுலேஸ்வரன்**

எம்.பி வீதி,
மயிலியதனை,
தொண்டமானாறு.

(சி/7017)

செல்வி
## யமுனா தருமலிங்கம்
(வேலணை வடக்கு, 5 ஆம் வட்டாரம்)

வேலணை வடக்கைச் சேர்ந்த செல்வி யமுனா தருமலிங்கம் நேற்று (01-04-99) சென்னையில் காலமானார்.

அன்னார் தருமலிங்கம் - சாந்திமதி தம்பதிகளின் சனிஷ் - புத்திரியும் சுவேந்திரன், சுமதி, கங்கா, ஞானதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னையில் நடைபெற்றன என்பதைத் தெரியப்படுத்திக்கொள்ளுகின்றோம்.

தகவல்
**திருமதி இ குணலெட்சுமி**
(சிறியதாய்)

160, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(64434)

## சின்னராசா சிவாகரன்

சின்னராசா சிவாகரன் (VSB குரூப் களஞ்சியப் பொறுப்பாளர், பிடாரி கோயிலடி அம்பாள் வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்) இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் ஆனைக்கோட்டை பிடாரி கோயிலடியைச் சேர்ந்த சின்னராசா நாகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் சிவபாலினி, சிவாஜினி, ரஜனிகௌரி, ஈஸ்வரி, கீதா, காலஞ்சென்ற கிருபாகரன் (கண்ணன்) ஆகியோரின் சகோதரனும் பரம்சோதிலிங்கத்தின் மைத்துனரும் சாந்தலிங்கம்- பத்மாவதி, தயாபரன்- பரமேஸ்வரி, சிவகுமார்- இலங்காதேவி ஆகியோரின் பெறாமகனும் விசாகினி, ராமா, ரேகா, தயாளன் குணா, சஜனி, ரதீஷ்குமார் சூட்டி, நதியா, நந்தன், நவநீதன, நவலங்கன் ஆகியோரின் சகோதரனும் ரவீந்திரனின் மைத்துனருமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்!
**வே. சின்னராசா** (சுபாஸ்)

பிடாரிகோயிலடி,
ஆனைக்கோட்டை.

(சி/7012)

## பாக்கியநாதர் தோமஸ்
[தொழில் நுட்ப உத்தியோகத்தர்]

நெடுந்தீவு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த P P J. தோமஸ் அவர்கள் 1-4-99 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரி [அதிபர், றோ. க. மாவிலித்துறை வித்தியாலயம், நெடுந்தீவு] அவர்களின் அன்புக்கணவரும் ஆஷாப் [மாணவி, திருக்குடும்பக் கன்னியர்மடம, ஆங்கில வித்தியாலயம், யாழ்ப்பாணம்] றமேஷ் [புனித பத்திரியார் கல்லூரி], ஒசான், சாந்தன், கியூறி, தர்சாயினி ஆகியோரின பாசமிகு தந்தையும் பாக்கியநாதர்-திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் முகந்தையா - காலஞ்சென்ற திருமதி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மேரியோசெவ் [சமாதான நீதிவான், கொழும்பு], காலஞ்சென்ற P.M.J. அன்ரனி [ஓய்வுபெற்ற உதவிக் கல்வி பணிப்பாளர், தீவகம்] இம்மானுவேல் [அபுதாபி], ஜேம்ஸ் [கனடா], காலஞ்சென்ற மேரிறஞ்சினி, யசிந்தா [இந்தியா], மரியஸ்ரெலா, மரிமலர் [வவுனியா] ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி ஸ்ரெலா, திருமதி P M J அன்ரனி [முன்னாள் அதிபர், ம.வி நெடுந்தீவு], றபேக்கா, சரஸ்வதி, மரியதாஸ், மரியநாயகம், மெலோடியஸ், தியாகராசா, தவமணி [ஆசிரியை, நெடுந்தீவு], பராசக்தி [கிராமிய வங்கி, நெடுந்தீவு] ஆகியோரின் அன்பு மைத்துனரும் தருமலிங்கம் [முன்னாள் பொது முகாமையாளர், பல நோ.கூ.சங்கம், நெடுந்தீவு], அரியநாயகம் [பிரதேச சபை தலைவர், நெடுந்தீவு] ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் [1-4-99] வியாழக்கிழமை நெடுந்தீவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
**இரா தருமலிங்கம்**

நெடுந்தீவு.

[64423]

## ஆச்சிரமத்தில் ஈஸ்ரர் இசை கானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

உயிர்த்தெழுந்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு தென் இந்திய திருச்சபையின் யாழ். மறை மாவட்டத்தினால் நடத்தப்படும் ''இறைவனின் அன்பு'' என்னும் தலைப்பிலான நாடகம் மற்றும் இசை கானங்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள கிறிஸ்தவ சேவா ஆச்சிரம வளாகத்தில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வுகள் அருள்மிகு அறிவர் பேராயர் எஸ். ஜெபநேசன் தலைமையில் இடம்பெறும். (இ-7)

## விதை நெல் விநியோகம்

கைதடி கமநல கேந்திர நிலைய எல்லைக்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கு அடுத்த காலபோக நெற் செய்கைக்கானவிதைநெல்லை பெற்றுகொடுக்க பெரும்பாக உத்தியோகத்தர்நடவடிக்கை மேற் கொண்டு வருகிறார்.

விதை நெல் தேவைப்படுவோர் தமக்குத் தேவையான நெல் ரகத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பத்துடன் ஒரு புசலுக்கு நூறு ரூபா வீதம் ஏப்ரல் ஏழாம் திகதிக்கு முன்னர் விவசாய சம்மேளனத்தின் ஊடாக வழங்குமாறு பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். சத்தியேந்திரன் அறிவித்துள்ளார். (ஐ - 117)


புலமைப்பரிசில்
1999
31 ஆவது பரீட்சையில்
அதி கூடிய புள்ளி பெற்றோர்
சு. லிஜா
யா/ சுண்டுக்குளி மக. கல்
க. நிரோஷி
வி. மயூரன்
யா/ இ. ஆ பா.
ச. கார்த்திகா
யா/ உரும்பிராய்
சை. த. வித்.
த. டேசிகா
யா/ சங்கானை
அ. மி. த. பா.
த காயத்திரி
சு. தனுசியா
யா/ சிறுப்பிட்டி
இந்து த. க. பா.
அடுத்த பரீட்சை:
04 - 04 - 99
BOND யாழ்.நகர்.
(64431)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
வெள்ளி, சனி
கே. பாலச்சந்தரின்
கையளவு மனசு
Part VI, VII
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
FAX No. 070 - 212223
FOREIGN T.P. No.
0094 - 70-212223
(சி/7016)

நாகம்ஸ்
சுன்னாகம்.
கடைசி வெற்றி வாரமாக
விஜய், விஜயகாந்த், யுவராணி, கௌதமி
நடித்த
செந்தூரபாண்டி
தினமும் 3 காட்சிகள்
10-30, 2-30
(64424)

ராஜா டாக்கீஸ் யாழ்ப்பாணம்.
இன்று முதல் குதூகல ஆரம்பம்!
திரைப்பட ரசிகர்களுக்கு ராஜாவின் புத்தாண்டு வெளியீடு!!
சூரியா, முரளி, ஜீவிதா, ரசிகா
மணிவண்ணன், விவேக், ராதிகா, நாஸர்
மற்றும் பலர் நடித்த
காதலே நிம்மதி
இன்று காட்சிகள்: 10-30, 2-00, 5-00,
(சி/7008)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளர்

**சின்னராசா சிவாகரன்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடையும் அதேவேளை அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்களும் ஊழியர்களும்,
செல்வ் ஸ்ராட் வைன்சொப்,
245, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7020)

# மரண அறிவித்தல்கள்

## மாரிமுத்து அப்புத்துரை

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் புதிய செங்குந்தா வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து அப்புத்துரை அவர்கள் 01-04-99 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வரத்தினம், இராசரத்தினம் (ராஜன் அழகுசாதன அகம், நல்லூர், யாழ்ப்பாணம்), குணரத்தினம், செல்வராணி, ஜெயரத்தினம், ஜீவரத்தினம், இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேஸ்வரி, தவகுமாரன் (ஹம்சா போட்டோ), துஷந்தி, ஜேந்தினி ஆகியோரின் மாமனாரும் சுகன்யா, பிரதீபன், சரண்யா, ஹம்ஷபிரியா, பானுபிரியா, ஹர்ஷிபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-04-99) காலை 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

தகவல்:
**இராசரத்தினம்**
(ராஜன் அழகு சாதன அகம், நல்லூர், யாழ்ப்பாணம்)

புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(64429)

## செல்லையா சிவசிங்கம்
[ஓய்வுபெற்ற கணக்காய்வாளர், கணக்காய்வுத் திணைக்களம்]

உடுவிலைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும்கொண்ட செல்லையா சிவசிங்கம் அவர்கள் 31-03-99 இல் கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-நாகம்மா தம்பதிகளின் புதல்வனும் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம்-தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், சிவயோகத்தின் அன்புக் கணவரும் ஜீவா [மலேசியா], லோகா [இந்தியன் எயர்லைன்ஸ்], கிரி [ஹற்றன் தேசிய சேமிப்பு வங்கி, கொழும்பு] ஆகியோரின் அருமைத் தந்தையும் சூரியதேவா [பொறியியலாளர், எயர்லைன் மலேசியா], சிவஸ்கந்தராஜா [சட்டத்தரணி, கொழும்பு], ஹர்சவர்த்தினி- [ஆசிரியை, பம்பலப்பிட்டிய இந்துக் கல்லூரி] ஆகியோரின் பாசமிகு மாமனும், மயூரன் [லண்டன்], பிரசெந்தூரன், மதுரா [மலேசியா], கார்த்திகா, பிரணவன், அக்சயன், ஆரபி ஆகியோரின் பேரனும், ராஜசிங்கம் [லண்டன்] காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், வீரசிங்கம், சிவபாக்கியம், இரத்தினமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வரத்தினம் செவ்வந்தி, [கனடா], நவநீதம் [றோஸ், நல்லூர்], குணபூசனம் [மல்லிகா - நோர்வே], காலஞ்சென்ற விசுவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சரஸ்வதி [லண்டன்], நாகராசா [நோர்வே] காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், Dr. ஜெகதீசன் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை [3-4-99] சனிக்கிழமை 19, ஜானகி லேன், கொழும்பு—04 [T.P 589702 ]என்ற விலாசத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**திருமதி நவநீதம் ஜெகதீசன்** [மைத்துனி]

363, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[64433]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் போட்டி

கொச்குவில் மத்திய சன சமூக நிலைய ஆதரவில் கே. வி. வி. வி. வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் மட்டுப்படுத்தப்பட்ட -30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு;-

★ காலை 8.30 மணி சென்றலைற்ஸ் (செட்ஸ்) அணி எதிர் யங்ஸ்ரார் அணி

★ பிற்பகல் 1.00 மணி — கே. வி. வி. வி. அணி எதிர் ஜொலிஸ்ரார் அணி. (ஐ-6)

## தனங்களப்புப் பகுதியில் உவர்நீர்த் தடுப்பு அணை

சாவகச்சேரி தனங்களப்புப் பகுதியில் 'கெயர்' நிறுவனத்தினரால் உவர் நீர்த் தடுப்பு அணை அமைக்கப்பட்டுள்ளது அத்துடன் கச்சாய் அம்மன்கோவில் குளம், புறவன்புலோ பெரிய தாவிற் குளம் ஆகியவை ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட வுள்ளன.

'கெயர்' நிறுவனத்தின் இவ்வருடத்திற்குரிய அபிவிருத்தி வேலைகள் திட்டத்தின் கீழ் இவ்வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப வேலைகள் அண்மையில் கச்சாய் அம்மன் கோவிலில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இவ் வைபவத்தில் 'கெயர்' நிறுவன பிரதிநிதி கதிர்காமநாதன், பொறுப்பாளர் அந்தோனிப்பிள்ளை உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-117)





றொக்லண்ட் டிஸ்றிலறிஸ் லிமிட்டெட்

ஏழு தசாப்தத்திற்கும் மேலான சிறந்த தரம்!

உத்தரவு பெற்ற சகல
மதுபான விற்பனை நிலையங்களிலும்
வாமாஸ் வைன் ஸ்ரோரிலும் கிடைக்கும்


## அறிவித்தல்

மிருசுவில் படித்த மகளிர் திட்ட
துர்க்காபுரந் துர்க்கை அம்மன்

ஆலயத்தில் பங்குனித் திங்கள் விசேட பூசையும், வானேற்ற வைபவமும் அருள் வாக்களிப்பும் 05 - 04 - 99 அன்று நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஆலய தர்மகர்த்தா.

[64421]

## தேவை

யாழ். நகரத்திலிருந்து பத்து மைல் தூரத்தில்
புதிதாகத் திறக்கப்படும்
முகவர் தபால் நிலையத்திற்கு
**தபால் அதிபர் / உபதபால் அதிபர் தேவை.**
ஓய்வு பெற்றவர்களும் வதியக் கூடியவர்களும்
விரும்பத்தக்கது.

தொடர்பு:-

சி. சிவபாலசுப்பிரமணியம்
இல 75, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/7013]

## தேவை

தொலைபேசி இயக்குவதற்கு இரண்டு பெண் ஊழியர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

சிற்றி தொலைத் தொடர்பகம்
**நவீன சந்தை மேல்மாடி,**
**சாவகச்சேரி.**

இங்கு உள்ளூர், வெளியூர் தொலைபேசி சேவை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல. 070 — 212303
070 — 212361

(சி/7011)

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

## முறைசாராக் கல்விப் பிரிவு - 1999
## விண்ணப்பங்கள் கோரல்

பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு பயிலுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. சுருக்கெழுத்து தட்டெழுத்து - [ தமிழ் ]
2. வானொலி பழுதுபார்த்தல்.
3. குளிரூட்டலும் காற்று சீராக்கலும்.

**விண்ணப்ப முடிவு திகதி:** 10 - 04 - 99
**பயிற்சிநெறி ஆரம்பம்:** 16 - 04 - 99

சுயவிவரங்களுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும்

- அதிபர்

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (சி/7002)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

நிதியமைச்சு — ஆசிய அபிவிருத்தி வங்கியினால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட கணக்கு எழுதுநர், கணக்குப் பதிவாளர்களுக்கான நிதி முகாமைத்துவ பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம்.

**இடம்:-** கைலாசபதி கலையரங்கு யாழ்.பல்கலைக்கழகம்
**காலம்:** 04 - 04 - 1999 ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 9.30 மணி

தலைவர்: திரு நா. இராசநாயகம் (இணைப்பாளர்)
கணக்காளர், பிரதேச செயலகம் உடுவில்

பிரதமவிருந்தினர்: திரு து. வைத்திலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்: பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்

பயிற்சியாளர்களை கலந்து சான்றிதழ் பெற்று சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

- அமைப்புக்குழு

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
**குலம் கிறீம் ஹவுஸ்,**
226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [64417]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

DELICA. L 300 MMC MODEL 20சிறி தொடர் இலக்க A/C VAN விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு நாள்களில் அல்லது கிழமை நாள்களில் பி. ப. 4 மணிக்குப் பின் பார்வையிடலாம். எக்ஸ் பிறஸ் இன்ஸ்ரிரியூட், இருபாலை, கோப்பாய்.

[64376]

### ஆங்கிலம் கற்பித்தல்

ஆங்கிலம் கற்றுக் கொள்ளலாம். ஆங்கில அடிப்படை அறிவு இல்லாதவர்கள் ஆரம்பத்திலிருந்து கற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ஆங்கில ஆசிரியர், இல. 93/24 இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை வீதி, யாழ்ப்பாணம்.

[64405]

### ஆசிரியா தேவை

தரம் 4, 5 ற்கு கற்பிக்கக் கூடிய திறமை வாய்ந்த தெளிவான கையெழுத்துள்ள ஆசிரியர் தேவை உடன் நேரில் தொடர்புகொள்ளவும். சரா. புவனேஸ்வரன் (NSA) நல்லூர் கோயில் முன்பாக, அக்கடமி லேன், பருத்தித்துறை வீதி, நல்லூர்.

[64399]

### தேவை

நல்ல நிலையில் உள்ள 650 வலு அல்லது 1000 வலு கொண்ட ஜெனரேற்றர் உடன்தேவை. விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சோ. சிவராசா, (மோட்டார் சைக்கிள் மெக்கானிக்) இல. 97, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

[64392]

### மணமகள் தேவை

கத்தோலிக்க 40 வயதுடைய ஓரளவு படித்த அழகான, குற்றம் இல்லாத மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: இல. 862, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [64340]

B. A. 32 வயது ஆசிரியருக்கு 5 அடி அல்லது குறைவான உயரமுள்ள அழகிய படித்த மணமகள் தேவை. அம்பாள் திருமண சேவை, ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[64384]

## கண்ணீர் அஞ்சலி

யாழ் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவரும் எமது மன்றக் காப்பாளரும் ஆகிய

திரு. சி. பத்மலிங்கம்

அவர்களின் அன்புத் தந்தையார்

**கிருஷ்ணன் சின்னத்தம்பி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவின் கலை மன்றம்,
இராமநாதன் நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

[64419]

## குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்
## 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும்

**நாள்:-** 04 - 04 - 1999 ஞாயிற்றுக்கிழமை
**இடம்:-** வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய்
பிரதம விருந்தினர்:- இலக்கண வித்தகர் இ. நமசிவாயம்
சிறப்பு விருந்தினர்:- திருமதி சிவராஜா (வலி-வடக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

★ சேவை நலன் பாராட்டு பெறுநர்:-
பண்டிதர் வ. நடராஜா
திரு. மு. திருநாவுக்கரசு
திரு. சி. தெட்சணாமூர்த்தி (கிராம அலுவலர்)

★ குரும்பசிட்டி மீளக்குடியமர்வு, நிவாரணக் கொடுப்பனவுகள் பற்றி ஆராய்தல்
★ 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில், பல்கலைக்கழக அனுமதி பெற்றோருக்கான அன்பளிப்பு வழங்கல்.
★ சிறுகதைப் போட்டி பரிசில் வழங்கல் (குரும்பசிட்டி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்)
★ உத்தியோகஸ்தர் தெரிவும் நடைபெறும்,
குரும்பசிட்டி மக்கள் அனைவரும் அன்போடு அழைக்கப்படுகின்றனர்.

ஆ. சி. நடராஜா
தலைவர்.

து. கலியுகவரதன்
செயலாளர்.
(64406)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் பங்குனித் திங்கள் 20 ஆம் நாள் (03 - 04 - 1999) சனிக்கிழமை பகல் 11-10 மணி முதல் 12-40 மணி வரையுள்ள சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய நல்வேளையில்

யாழ். நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த (மன்னார் - கோமதீஸ்) திரு திருமதி முத்தையா தம்பதிகளின் ஏக புத்திரன்
திருநிறை செல்வன்
**சிறிதரன்**
(சிறி)
அவர்களுக்கும்

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த திரு திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**கிருதாரணி**
(கிரிஜா)
அவர்களுக்கும்

திருமண நிகழ்வு மண்டபம் 'Burg Bach Saal'
Dorf Str - 12, Kolin Platz, 6300 Zug Swiss

திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தாங்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி முத்தையா
24/3, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி சுப்பிரமணியம்
[illegible]
நீர்வேலி தெற்கு.

(இரு வீட்டார் அழைப்பு)
(64400)

வெளிவந்து விட்டன!

## தர்க்கப் போலிகள்
விலை 50/-

## வென்பட வரைமுறை
விலை 35/-

ஆசிரியர்: வே. யுகபாலசிங்கம் (B A (Hons) M A (Phil) Dep in Ed.)

(64415)

## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி
**ம. சோமசுந்தரம் D.A.M. (Cey)**
(M.S மருந்தகம்)

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

அகில இலங்கை D.A.M. பட்டதாரிகள் வைத்தியசங்கம்.

(64411)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு: 10 — 10 — 1944



இறப்பு: 04 — 03 — 1999

## முருகேசு சுவாமிநாதன்
[கிராம அலுவலர் - உடையார்கட்டு]

04 - 03 - 1999 அன்று உடையார்கட்டில் காலமான அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரத்தில் பலவகையிலும் பங்கெடுத்தவர்களுக்கு எமது நெஞ்சம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (03 - 04 - 99) எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
கா. யோகராசா (சகலன்)
யோ. பத்மாவதி (மைத்துனி)
யோ. பத்மயோகன் (பெறாமகன்)

37/02, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.
(64407)

## உதயன்

① உதவி ஆசிரியர்கள்
② மொழி பெயர்ப்பாளர்

பத்திரிகைத்துறையில் அல்லது வேறு ஏதாவது வெகுஜன ஊடகத்துறையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவமும், ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் உதவி ஆசிரியராகவும் பணிபுரிந்த தகுதியுள்ளோர் விண்ணப்பிக்கலாம். 40 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. இரவுப்பணி செய்யத்தக்க உடல் ஆரோக்கியம் அவசியம். ஆங்கில அறிவும் மொழிபெயர்ப்பு ஆற்றலும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

ஆங்கிலத்தில் மிகுந்த தேர்ச்சியும் தமிழில் பாண்டித்தியமும் உடையவர்களிடமிருந்து மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. செய்திகள், கட்டுரைகளை பத்திரிகைக்கு ஏற்ற வகையில் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த மூன்று வருட அனுபவம் தேவை. தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கக்கூடிய திறமை உடையவர்களுக்கு விசேட முன்னுரிமை தரப்படும். இரவுப் பணி செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும்.

பூரண சுயவிவரங்களுடன் 3 - 4 - 1999 ஆம் திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும்.

பிரதம ஆசிரியர்
உதயன் - சஞ்சீவி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்புச் சபையின் மீது புளொட் குற்றச்சாட்டு!

வவுனியா, ஏப்ரல் 2

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து — அதன் முகமூடியை நாம் கிழித்தெறியப் போவதை அறிந்த — சர்வதேச மன்னிப்புச் சபை நாம் எந்த விதமான மக்கள் விரோத செயல்களிலும் ஈடுபடாத போதும் எம்மீது களங்கம் கற்பிக்கும் கபட நோக்கில் எமது அரசியல் எதிரிகளினால் வழங்கப்படும் ஆதாரமற்ற செய்திகளை வெளியிட்டு வருகின்றது.

கடந்த 30 ஆம் திகதி வவுனியாவில் புளொட் அமைப்பின் அலுவலகங்களும் முகாம்களும் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது தொடர்பாக புளொட் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐ. நா. சபையை கைப்பொம்மையாக வைத்துக்கொண்டு எல்லா நாடுகளிலும் ஆழமாகக் கால் பதிக்க அமெரிக்கா செய்யும் அப்பட்டமான பயங்கரவாதத்தையும் படுகொலைகளையும் சர்வதேச மன்னிப்புச்சபை தங்க முலாம் பூசி மூடி வருகின்றது.

அமெரிக்கா ஈராக் மீது தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டதைப் பார்த்துக் கொண்டும் —

செம்மணியில் 600 உடல்கள் புதைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டும் — துரையப்பா விளையாட்டரங்கில் மனித எச்சங்களைக் கண்டும் — மௌனம் சாதித்து வரும் சர்வதேச மன்னிப்புச் சபை —

ஐ. நா. சபையின் சட்டதிட்டங்களை மீறி யுகோஸ்லாவியா மீது நேட்டோ நடத்தும் குண்டுத் தாக்குதல்களையும் அதனால் மனித உயிர்கள் மடிவதையும் ஆயிரமாயிரம் மக்கள் அகதிகளாவதையும் பார்த்தும் ஏதும் அறியாதது போன்று இருக்கும் மன்னிப்புச் சபை—

எம்மீது மட்டும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈராக் மீது தாக்குதல் நடத்தியபோது அமெரிக்கப் படைகளுக்கு எதிராக வவுனியாவில் மட்டுமல்ல பிற இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்பனவற்றை நடத்தி அமெரிக்காவின் செயல்களை வெளி உலகுக்கு அம்பலப்படுத்தினோம்.

ஐ. நாவின் சொல்லையும் மீறி யுகோஸ்லாவியா மீது குண்டு வீசும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முகமூடியை கிழித்தெறியப் போவதை அறிந்த சர்வதேச மன்னிப்புச் சபை— நாம் எந்த விதமான மக்கள் விரோத செயற்பாடுகளிலும் ஈடுபடாத போதும்— எம் மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற கபட நோக்கில் எமது அரசியல் எதிரிகளால் வழங்கப்படும் ஆதாரமற்ற செய்திகளை வெளியிட்டு வருகின்றது. சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்த கபட நோக்கத்தை மக்கள் இனம் கண்டு கொள்ளவேண்டும்.

தொடர்ச்சியாக பல குற்றச்சாட்டுக்களை சர்வதேச மன்னிப்புச்சபை எம்மீது சுமத்தி வந்துள்ள வேளையில் எமது அரசியல், இராணுவ நிலைகளை சோதனையிட்டு பார்க்குமாறு நாம் படையினரிடம் பல தடவைகள் கோரியிருந்தோம்; எனினும் இவ்வளவு காலம் எமது முகாம்களை சோதனை செய்யாது இருந்து வந்த இராணுவம் சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து கடந்த 30 ஆம் திகதி கூட்டுப்படையினர் எமது இராணுவ, அரசியல் நிலைகளைச் சோதனையிட்டு எந்தவிதமான தடயங்களும் இல்லை என்பதை தமது புத்தகத்தில் பதிவு செய்து கொண்டு சென்றுள்ளமை எமக்கு மிகுந்த மனத்திருப்தியைத் தருகின்றது.

இந்தச் சோதனைகளைச் செய்வதற்கு உதவியமைக்காக சர்வதேச மன்னிப்புச் சபைக்கு நன்றி செலுத்தும் அதேவேளை இனிமேலாவது இவ்வாறான தவறான தகவல்களை வெளியிட வேண்டாம் என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் கேட்டுக் கொள்கின்றது.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

'யுனிசெவ்' நிறுவனமும் உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்திய பயிற்சி சான்றிதழ் வழங்கும் வைபவமும், கலை விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் செல்வி விஜிதா தங்கவடிவேல் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ. வி. கிருஷ்ணசாமி, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, யாழ். செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் க. பாலகிருஷ்ணன் ஆகியோரும் விசேட விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துறைத் தலைவர் மா. நடராஜசுந்தரமும் கலந்து கொள்வார்கள்.

(ஐ-173)


## வாழ்த்துகின்றோம்

**கோப்பாய் அரசினர் வைத்தியசாலை உள்ளக விடுதியைத் திறப்பதற்கு**
(03. 04. 99) வருகை தரும்

பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளரையும்
வைத்தியசாலையைப் பொறுப்பேற்க முன் வந்த
**வைத்திய அதிகாரி சந்திரசேகரம்**
அவர்களையும்

வரவேற்று வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம். அத்தோடு இவ்வுள்ளக விடுதியைத் திறப்பதற்கு ஆவன செய்த சகல தரப்பினருக்கும் கோப்பாய் வாழ் மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கோப்பாய் வடக்கு சனசமூக நிலையமும்**
**கோவை இளைஞர்களும்.**

(64402)



உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் பங்குனி மாதம் 20 ஆம் நாள்
(02 - 04 - 1999) வெள்ளிக்கிழமை, சுவாதி நட்சத்திரமும்
துதியைதிதியும் சித்தயோகமும் கூடிய சுப தினத்தில்
பகல் 12. 25 மணிமுதல் 1. 40 மணி வரையுள்ள
சுபமுகூர்த்த நல்வேளையில்

திருமதி தம்பித்துரை
அவர்களின் புத்திரன்
திருநிறை செல்வன்
**ஜெகதீஸ்வரன்**
அவர்களுக்கும்

திரு திருமதி சிதம்பரநாதன்
அவர்களின் புதல்வி
திருநிறை செல்வி
**சஷீலா**
அவர்களுக்கும்

Megre Gor Park Recreation Centre Canada இல் அமைந்துள்ள மண்டபத்தில் திருவருள் துணையுடன் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

திருமதி தம்பித்துரை
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

திரு திருமதி சிதம்பரநாதன்
இராஜவீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(64398)



## கண்ணீர் அஞ்சலி



**சின்னராசா சிவாகரன்**
(களஞ்சியப் பொறுப்பாளர், வி. எஸ் பி. குறூப்)

வி.எஸ்.பி: குறூப்நிறுவன களஞ்சியப்பொறுப்பாளர் சின்னராசா சிவாகரன் அவர்களின் திடீர்மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சிஅடைகின்றோம், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்ம சாந்திக்கவும் பிரார்த்திக்கின்றோம்.

**V. சிவசூரியகுமாரன் குடும்பத்தினர்**
நெல்லியடி.

தயா கொமினிக்கேசன்,
220, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/7003)



## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 08 — 12 — 1932



விண்ணில்: 28 — 03 — 1994

திருமதி
**பரமேஸ்வரி கனகலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியை)
திதி: 02—04—99

எண்ணத் துறைகின்ற எழிலோ வியமுந்தன்
வண்ணங் கண்டு நாம் மகிழ்ந்தோமே- தண்ணமுதே
நெஞ்சம் நெக்குருகி நினைத்திங்கு வாடவைத்து
அஞ்சுகமே மறைந்தாயோ ஓ!

எம் குலவிளக்கின் ஆத்ம சாந்திக்கு
அஞ்சலிக்கின்றோம்.

குடும்பத்தினர்

பெரியமாவடி,
சாவகச்சேரி.
(சி 6972)



## தேவை

ஐஸ்கிறீம் கோண் தயாரிப்பதில்
அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-
ரவி கிறீம் ஹவுஸ்,
K. K. S. வீதி, சுன்னாகம்.

(64393)



## முக்கிய அறிவித்தல்

கொம்பியூட்டர் றோணியோவுக்கும் அதனோடு இணைந்த புத்தக வேலைகளுக்கும் மற்றும் ஆண்டு ஒன்று தொடக்கம் பல்கலைக்கழகம் வரையிலான பாடநூல்கள், பாடசாலை, அலுவலக உபகரணங்கள், காகிதாதிகள், மாதாந்த, வாராந்த சஞ்சிகைகள், தினசரி புதினத் தாள்கள், சகல விதமான இந்திய புராண, சமய சம்பந்தமான நூல்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும். நியாயமான விலையிற் பெற்றுக்கொள்ள ஆசீர்வாதம் புத்தகசாலைக்கு உடனே செல்லுங்கள்,

ஆசீர்வாதம் புத்தகசாலை,
23, தனங்களப்பு வீதி,
சாவகச்சேரி.

(64383)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



[திருமதி]

**பாக்கியம் அம்பலவாணர்**

மலர்வு
**24 — 12 — 1907**

உதிர்வு
**02 — 03 — 1999**

அன்பின் திருவுருவாய், அணையா ஒளிவிளக்காயிருந்து எமக்கு வழிகாட்டிய முன்னறி தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று (2 - 4 - 1999) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

—குடும்பத்தினர்

வாணி மஹால்,
வட்டுக்கோட்டை.

(64379)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி பொன்னம்பலம் ஆச்சிமுத்து**
(பொன்னாலை)

தோற்றம்:
09 — 09 — 1908

மறைவு:
13 — 04 — 1998

**திதி: 02 - 04 - 1999**

அமைதியின் திருவுருவாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!

ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் நீங்காத நினைவுகளாய் உள்ளன. ஆத்ம சாந்திக்காக இறைவனை நாம் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

பொ. புவனேஸ்வரி,
'பொன்மனை',
பொன்னாலை, சுழிபுரம்.

(64321)

உ
அம்பாள் துணை
**காரைநகர்**
அருள்மிகு மணற்காடு

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

**2 ஆம் நாள் மண்டலாபிஷேக திருவிழா**
**03 - 04 - 99**

வரலாற்றுச் சிறப்புமிக்க அம்பிகையின் 2 ஆம் நாள் மண்டலாபிஷேக திருவிழா 03-04-99 சனிக்கிழமை காலை காஞ்சிப் பெரியவாள் 07-06 98 ஈழத்துச் சிதம்பர மகா கும்பாபிஷேகம் செய்த பிரதிஷ்டா சிரோன்மணி சிவானுபூதி கிரியாக்கிரமஜோதி சிவாச்சார்ய துரந்தரா சிவானுபூதி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள், நல்லை ஆதீனம், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவத்திரு நா. ஞானசம்பந்தக் குருக்கள் போன்றோர்கள் ஆசியுடன் நடைபெறும். 1008 சங்காபிஷேகம், யாழ்ப்பாணம் நாதஸ்வர தவில் வித்துவான்கள், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் B A. உட்பட பலர் வருகை தந்து அம்பிகைத் தாயின் உற்சவத்தைச் சிறப்பிப்பார்கள்.

எல்லோரும் வருக! வருக!
பூரண ஆசி பெறுக!
நன்றி வணக்கம்.
அம்பிகைக்குச் சரணம்!

பரோபகாரமணி
**கே. கே. சுப்பிரமணியம் ஜே. பி.**
**குடும்பம்**

மணற்காடு,
காரைநகர்.

(சி / 6908)

## கட்டாக்காலி மாடுகளால் தொல்லை

வடமராட்சி, ஏப்ரல் 2

குடத்தனைப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளது.

இப்பகுதியில் அறுவடையை எதிர் நோக்கியுள்ள வெங்காயப் பயிரை கட்டாக்காலி மாடுகள் பெருமளவில் அழித்துள்ளன.

கட்டாக்காலி மாடுகளின் தொல்லை குறித்து இப்பகுதி கமக்காரர் அமைப்பு கிராம சேவை அலுவலரிடம்முறைப்பாடு செய்துள்ளது.

(ஐ-173)

## சுதேசிய திருநாள் கொண்டாட்டம்

கொழும்புத்துறை, ஏப்ரல். 2

அரியாலை மக்களால் பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்டு வரும் அரியாலை சுதேசிய திருநாள் விழாவை இவ்வருடமும் சித்திரை புது வருடதினத்தன்று சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

கலைப் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் போன்றவை பிரதான நிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ளன (ஐ - 30)

## சான்றிதழ் வழங்கல்

வலி. கிழக்கு. ஏப்ரல் 2

வலி. கிழக்கு பிரதேச முன் பள்ளி மாணவர், ஆசிரியர்களின் கலைவிழாவும் ஆசிரியப்பயிற்சி சான்றிதழ் வழங்கும் வைபவமும் யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளன.

முன்பள்ளி ஆசிரியை செல்வி ம. பொன்னையா தலைமையில் இடம்பெறும் இந்தநிகழ்வுக்கு யாழ். செயலக பிரதித்திட்டமிடல்பணிப்பாளர் க. பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும் வலி கிழக்கு பிரதேசசபை தலைவர் பூ. குணசிங்கம், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் செ. கிருஷ்ணசாமி, கோப்பாய் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்,

(உ-3-180)

## தேவை

எமது சங்கத்தின் எல்லைக்குள் இருக்கும் வியாபார ஸ்தாபனங்களுக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இரவு நேரக் காவற் கடமைபுரியத் தகுதியுடையவர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும். நேரில் வரவும்.

**விண்ணப்ப முடிவு திகதி. 10 - 4 - 1999**

செயலாளர்,

**நல்லூர் வணிகர் கழகம்,**
**ஆடியபாத வீதி, திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

(64403)

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு நிகழ்வு

**இடம்:** வரணி மகாவித்தியாலய
பிரதான மண்டபம்.

**காலம்:** 02 - 04 - 1999 இன்று வெள்ளிக்கிழமை
முற்பகல் 10. 00 மணி

தலைவர்: திரு. எஸ். எஸ். உதயகுமார்
(தலைவர், பழைய மாணவர் சங்கம்.)

வாழ்த்துரை: திரு. ந. நவரத்தினராசா
(அதிபர், வரணி மகாவித்தியாலயம்)

முதன்மை விருந்தினர்: திரு. வ. செல்வராசா
(பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்.)

சிறப்பு நிகழ்வுகளாக நடைபெற உள்ளவை

① **மெல்லிசை நிகழ்வு**
எக்சலன்ற் இசைக்குழு

② **''கணனியின் முக்கியத்துவமும் பயன்பாடும்''**
பற்றிய கருத்துரை வழங்குபவர்
திரு. கு. விக்கினேஷ்
IIS கணனிப் பயிற்சி நிலைய
முகாமை இயக்குநர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: மேற்படி அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தொடர்பாகக் கிடைத்த நிதி எமது வித்தியாலயத்தின் முற்பக்க எல்லைக்கான மதில் அமைப்புப் பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும் இது தொடர்பாக பல கோணங்களில் உதவிபுரிந்தவர்களுக்கு எமது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு. மு. திவ்வியபாலன்**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்
வரணி மகாவித்தியாலயம்.

விளம்பர அன்பளிப்பு:

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அம்பிகா மருந்தகம்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

**இந்திராணி வெதுப்பகம்**
கண்டிவீதி, கொடிகாமம்.

(64359)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் பங்குனித் திங்கள் 20ஆம் நாள் (03 - 04 - 1999) சனிக்கிழமை காலை 8.46 மணி முதல் 9 06 மணி வரையுமுள்ள சுவாதி நட்சத்திரமும், இடப லக்கினமும், அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

சின்னத்தம்பி தெய்வானை
தம்பதிகளின் புதல்வன்
**திருநிறை செல்வன்**
**சுந்தரலிங்கம்**
அவர்களுக்கும்

ஓய்வுபெற்ற தபால்சேவகர்
நடராசா பாக்கியலட்சுமி
தம்பதிகளின் புதல்வி
**திருநிறை செல்வி**
**இராசலட்சுமி**
அவர்களுக்கும்

வல்வைநகர் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் வைத்தீஸ்வரப் பெருமான் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்து வைக்க பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திரு. திருமதி சி. சின்னத்தம்பி**
சுபபர்மடம்,
பருத்தித்துறை.

**திரு. திருமதி மா. நடராசா**
சிவபுரவீதி (சிவன்கோயிலடி)
வல்வெட்டித்துறை.

(இரு வீட்டார் அழைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொருளாதார நம்பிக்கை

எமக்கு இன்று ஏற்பட்ட இன்னல்களால் எமது பொருளாதாரச் சுதந்திரத்தை இழந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அதாவது எமது பொருளாதாரச் சுதந்திரத்தில் நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் இன்றைய யதார்த்தமான நிலையை இவ்வாறு விவரித்திருக்கிறார் யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார்.

பொருளாதாரச் சுதந்திரம் இல்லாமல் அரசியல் சுதந்திரத்தினால் எவ்வித பயனுமில்லை. பொருளாதாரச் சுதந்திரம் இருந்தால் அதுவே அரசியல் சுதந்திரத்துக்கு அடிகோலும் வல்லமை உள்ளது. இது பல நாடுகளிலும் அனுபவரீதியாக உணரப்பட்ட ஒன்றாகும் பொருளாதாரச் சுதந்திரம் இழக்கப்பட்டால் அதன் வழியாக மக்களின் சுய கௌரவமும் மனித மாண்பும் இயல்பாகவே — தானாகவே — இழக்கப்பட்டுவிடும்.

உரிமைக்காகப் போராடும் ஒரே காரணத்துக்காக தமிழர்களின் பொருளாதாரம்சின்னாபின்னப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாடு போன்ற பகுதிகளில் கூட, மக்கள் தங்கள் தொழில்களைச் சுதந்திரமாகச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை.

இதனாலேயே ஆயர் கூறுவது போன்று, பொருளாதார சுதந்திரத்தில் நம்பிக்கையை இழந்து மக்கள் மற்றவர்கள் தரும் நிவாரணத்தில் வாழ வேண்டிய நிலைமை — நிர்ப்பந்தம் — ஏற்பட்டுள்ளது. இது மிகவும் பாரதூரமான தாக்கமும், பாதிப்பும் ஆகும் என்பதனை அரசாங்கம் உணர்வதாக இல்லை.

பாதுகாப்பு என்ற சொற்றொடரைக் கேடயமாக வைத்துக் கொண்டு அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவற்றை ஏந்திய வண்ணம் மக்களின் சுதந்திரத்தை மறைமுகமாக நசுக்குகின்றது.

நடைமுறையில் இவ்வாறு செய்து கொண்டு, குடா நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்யப் போகின்றோம்; அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பிக்கப்போகின்றோம்; குடா நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழகப் போகின்றோம்; என்று அரசாங்கம் சப்புக் கொட்டுகின்றது.

இந்தக் கவர்ச்சி வாசகங்களைத் தவிர்த்து மக்கள் தமது சொந்த உழைப்பின் மூலம் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் வாய்ப்பளிக்குமானால்அதுவே பெரியகாரியமாக அமையும். விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் ஆகிய துறைகளில் இங்குள்ள வளங்களைத் தாராளமாகவும், உகந்த முறையிலும் பயன்படுத்தினால் இப்போது கண்டுள்ள பொருளாதார அழிவை நிவர்த்தி செய்து முந்திய நிலைக்கு மீளக்கூடிய ஆற்றலும், முயற்சியும் கடும் உழைப்பும் தமிழ் மக்களுக்கு உண்டு என்பதனை அரசாங்கம்புரிந்துகொள்ள வேண்டும். தமிழர் பிரதேசத்தைப் பிரித்துப்பார்க்காவிடில் இது நாட்டுக்கும் நன்மை தரும்.

# இருண்ட உலகுக்கு ஒளி கொடுத்த கர்த்தரின் பாதையை தொடர்வோம்

> இன்று பெரிய வெள்ளி ஆகும் அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

**ஏ. சி. மத்தியூஸ்**

ஜெத்சமேனித் தோட்டத்தில் இயேசுக்கிறிஸ்துநாதர் முழங்காலிலிருந்து ''தந்தையே! உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கலத்தை என்னிடமிருந்து அகற்றியருளும், எனினும் என் விருப்பமன்று உம்முடைய விருப்பமே நிறைவேறட்டும்'' என்று செபித்தார். அப்போது வானதூதர் ஒருவர் அவருக்குத் தோன்றி அவரைத் திடப்படுத்தினார். கொடிய வேதனைகளுக்கு உள்ளாகவே மேலும் உருக்கமாகச் செபித்தார். அவருடைய வியர்வைத் துளிகள் பெரும் இரத்தத் துளிகளாக நிலத்தில் விழுந்தன.

எம் ஆண்டவர் கிறிஸ்து இவ்வளவு தூரம் கண்ணீர் விட்டழுவதற்கு காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. தன்னோடு உணவருந்தி தனது சீடர்களுள் ஒருவனாக இருந்த யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுக்கப்போகிறானே என்று அவர் வேதனைப்பட்டிருக்கலாம். ஆம் அவர் இராப்போசன விருந்திலே ''என்னைக் காட்டிக் கொடுப்பவனுக்கோ ஐயோ கேடு'' என்றார்.

அதே தினத்தில் தானே சீமோன் இராயப்பரைப் பார்த்து ''நீ மும்முறை மறுதலிக்குமுன் இன்று கோழி கூவாது என உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார். நெறிகெட்டவர்களோடு ஒன்றாக எண்ணப்பட்டார். என்று எழுதப்பட்டது நிறைவேறவேண்டும் என்பதற்காக வாள் இல்லாதவன் தன் மேலாடையை விற்று வாள் ஒன்று வாங்கிக் கொள்ளட்டும் என்று கூறினார். இவை மட்டுமல்ல இன்னும் எத்தனையோ சம்பவங்கள் அவரைத் துன்பத்தில் ஆழ்த்தி இருக்கலாம்.

கிறிஸ்துநாதர் கடவுளாக இருந்தும் மனிதனாகவே பாடுகளைப் பட்டார் அவருடைய கண்ணீர்த்துளிகளும் வியர்வைத் துளிகளும் இரத்தத்துளிகளாக நிலத்தில் விழுந்தன.

ஆண்டவர் கிறிஸ்து பாடுகளைப் படாமல் தடுக்க வான தூதர் ஆயிரம் ஆயிரமாக வந்து அவருக்காகப் போராடி அவரைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால் அவருடைய பாடுகளும் சிலுவை மரணமும் காட்டிக் கொடுப்பவர்களுக்கும், மறுதலிப்பவர்களுக்கும் நெறிகெட்டவர்களுக்கும் தேவையான ஒன்றானதாகவே இருக்கின்றது. இதனாலேயே அவர் இப்படியானவர்களை எல்லாம் மீட்டு இரட்சிப்பதற்காகவே மனித உருவில் வந்து தன் உயிரைப் பலியாக்கினார்.

யூதாஸ் எம் ஆண்டவரை முத்தமிட்டல்லவா காட்டிக் கொடுத்தான். எதற்காக? முப்பது வெள்ளிக்காசுக்காக.

இராயப்பர் மும்முறை கிறிஸ்துவை மறுதலித்தாரே எதற்காக? தன் உயிரைக்காப்பாற்றிக் கொள்வதற்காக.

பாடுகளின் பாதையில் பரமன் கிறிஸ்து சென்று கொண்டிருக்கிறார். அவர் பின்னே திரளான மக்களும், பெண்களும் மாரடித்துப் புலம்பி அவரைப் பின் தொடர்ந்தார்கள். ஆண்டவர் அவர்களைத் திரும்பிப் பார்த்து ''மகளிரே! எனக்காக அழாதீர்கள் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்'' என்று கூறினார்.

கசையடியையும் கனமான சிலுவைப் பாரத்தையும் தாங்கி மும்முறை நிலத்திலே விழுந்து எழுந்து கல்வாரி மலை நோக்கி வருகின்றார். அங்கு அவரைக் கொடிய யூதர் சிலுவையிலே அறைந்தார்கள்.

அவமானத்தின் சின்னமான சிலுவையை மீட்பின் சின்னமாகிய ஆண்டவர் ஆணிகளால் அறையுண்டு சிலுவையிலே தன் உயிரை விடுகின்றார். அப்பொழுது உலகமே இருண்டது. ஆலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது.

இருண்ட இந்த உலகத்துக்கு ஒளி கொடுத்த அவர் போதனைகளைப் பின்பற்றுவோம். ஆலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது போல், பல்லுக்குப் — பல், கண்ணுக்கு — கண் என்றதைக் கிழித்து ஒருபக்கம் வைத்து ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறுகன்னத்தையும் கொடுப்போம். ★

## வடமராட்சி புகையிலை விலை இம்முறை வீழ்ச்சி

வடமராட்சி, ஏப்ரல் 2

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலையின் விலை முன்னைய காலங்களை விட இம்முறை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது.

புகையிலை அறுவடை மும்முரமாக நடைபெற்று வரும் இவ்வேளையில் ஒரு புகையிலைக் கன்று 10 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வடமராட்சிப் பிரதேசப் புகையிலை வியாபாரிகளை விட இம்முறை கொக்குவில், கோண்டாவில் பகுதிப் புகையிலை வியாபாரிகளே இப்பிரதேசத்தில் அதிக அளவு புகையிலையைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

(ஐ-173)

## கடற்றொழிலாளர் விவரம் சேகரிப்பு

வடமராட்சி, ஏப்ரல் 2

நாகர்கோவில் பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்களின் விவரங்கள் சேகரிகப்பட்டு வருகின்றன.

இப்பகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கடற்றொழிலாளர்களின் விவரங்களைச் சேகரித்து பதிவு செய்து வருகிறது.

(ஐ - 173 - 36)

# இறைவனது நாமத்தை உச்சரித்தால் வேண்டிய நன்மைகள் பெற்றிடலாம்!

**பண்டிதர் அ. ஆறுமுகம்**

திரு என்பது அழகு, தெய்வீகம் எனப்படும். எனவே திருநாமம் இறைவனது திருப்பெயராகும். 'ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு, ஆயிரம் திருநாமம் பாடி...'' என்பது திருவாசகம். ''பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான்'' என்று பாடினார் அப்பர். எனவே எம்பெருமானுடைய திருநாமம் இதுதான் என்று வரையறை செய்து கூறமுடியாது. எங்கள் ஆர்வம், ஆசை, பக்தி, ஆராமை காரணமாகப் பல பல பெயர்களால் அவரையழைத்து மனநிறைவு எய்துகின்றோம்.

சைவ சமயத்தவராகிய நாம் எமது முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்று வழிவழியாகக் கூறி வணங்கி வருகின்றோம். சிவபெருமானின் வேறல்லாதாராகிய சிவசக்தி, விநாயகர், வைரவர், வீரபத்திரர், கந்தவேள் என்போரையும் சிவபெருமானாகவே வணங்குகின்றோம்.

சிவபெருமானது திருநாமங்களாக சிவசிவ, நமசிவாய, சிவாய நம, பரமேஸ்வராய என்பனவும், சிவசக்தியின் திருநாமங்களாக ஓம் சக்தி, பராசக்தி, சிவசக்தி, சிவை, அங்கயற்கண்ணி முதலாயினவும் விநாயகரின் திருநாமங்களாக விக்கினேஸ்வரர், கணபதி, கணேசர், கணநாயகர் போன்றனவும், வைரவப் பெருமானது திருநாமங்களாக பைரவர், வைரவர் வடுகர் என்பனவும், கந்தவேளின் திருநாமங்களாக முருகன், கடம்பன், காங்கேயன், கார்த்திகேயன், வேலவன் என்பனவும் பிறவும் எம்மால் செப்பப்பட்டு வருகின்றன.

விட்டுணு மூர்த்தியையும் நாங்கள் நாராயணா, ஹரே கிருஷ்ணா கோவிந்தா, கோபாலா என்றும் தோத்திரிக்கின்றோம்.

மேற் கூறப்பட்டன எல்லாம் மந்திரங்கள் ஆகும். மந்திரம் என்பதன் பொருள் நினைப்பவரைச் செப்புபவரைக்காப்பது. எல்லா மந்திரங்களும் மிகவும் மேலான சக்தி வாய்ந்தவை. அவற்றை உயர்வு, தாழ்வுஎனப் பாகுபடுத்தாது நாங்கள் நம்பிக்கையுடன் செபிக்கலாம். கடவுள் ஒருவரே. ஒருவர் தாம் பல பேருளர். இந்தக் கடவுளர் அனைவரையுமோ அன்றி இவர்களில் தமக்கு விருப்பமான ஒரு மூர்த்தியையோ வழிபடலாம். இம் மந்திரங்களைச் செப்புபவர்கள் பொருளுணர்ந்து நம்பிக்கையுடன் ஓதினால் அதிக பயன் கிடைக்கும்.

சைவ மரபிலே பிறந்தோர் அனைவரும் சமய தீட்சை பெற்றிருத்தல் வேண்டும். தீட்சை பெறாதவர் சைவர் எனக் குறிப்பிடப்படார். சைவ சமயதீட்சை பெற்றவர்களே சைவத் திருமுறைகளைப்பாட, சைவசித்தாந்த சாத்திரங்களைப் படிக்க, மங்கலமும் அமங்கலமுமான சைவக் கிரியைகளைச் செய்ய உரித்தும் தத்துவமும் உடையவர், மந்திரங்களை ஓதும் தகுதியும் அவர்களுக்கே உரியது.

திருநாமம் செப்புவதற்கு இடவசதியோ எவருடைய துணையுமோ வேண்டியதில்லை. எந்த வேளையிலும் நூற்றெட்டு நாமங்களையோ அல்லது ஆயிரத்து எட்டு நாமங்களையோ எண்ணியும் செபிக்கலாம், கோடி மந்திரமும் செபிக்கலாம். எந்தத் தொழிலைச் செய்யும் போதும் நாமம் செபிக்கலாம், விழிப்பு நிலையில் மட்டுமன்றி உறக்க நிலையிலும் ஏன் கனவிலுங் கூட நாமம் செபிக்கலாம். சரியை கிரியைத் தொண்டுகளைச் செய்யும் வேளைகளிலும் செபிக்கலாம்.

பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றதன் பயன் பெருமானை அடைதலே. அவ்வாறு அடைவதற்கு கடினமான ஹடயோகம், மயூராசனம், சர்வாங்காசனம் போன்றவற்றிலும் பார்க்க இலகுவான நாம செபம் நம்பிக்கையுடன் செய்தால் நிச்சயம் பலன் தரும்.

### ஞானக் கதிர்

''திருநாமம் ஐந்தெழுத்துஞ்
செப்பாராகில், தீ வண்ணர்
திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில்
சூழாராகில், உண்பதன்முன்
மலர்பறித் திட்டுண்ணா
ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ
றணியா ராகில், அளியற்றார்
பிறந்தவா றேதோ என்னில்
பெருநோய்கள் மிக நலியப்
பெயர்த்தும் செத்தும்,
பிறப்பதற்கே தொழிலாகி
இறக்கின்றாரே ''

என்ற அப்பர் சுவாமிகளின் தேவாரம் எம்மை எல்லாம் இறைத் தியானத்தில் ஈடுபடுத்தி நாம் மனிதராக வாழ வழிவகுத்துள்ளது. ★

### நாளை

பங்குனி 20
சனிக்கிழமை
திதி: துதியை
முன்இரவு 7.30 வரை
நட்சத்திரம்: சுவாதி
முன்இரவு 9.11 வரை.
காரைக் காலம்மையார்
குருபூஜை
சுபநேரம்: 3.10-4.40
ராகுகாலம்: 9.10-10.40
[illegible]லுக்கும் இரவுக்கும்
(பழைய [illegible])

### உதய வாக்கு

நானே அநேகரை மீட்கும் பொருளாக நம்முடைய ஜீவனைக் [illegible]
இயேசுபிரான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக்கழகம்
(வெளிவாரி)

G. A. Q புதிய பிரிவுகள் ஆரம்பமாகி விட்டன. இவற்றிற்குரிய பதிவுகள் யாழ் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

**B.A. FINAL** ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களுக்கு: S. அருள்நங்கை.

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(64382)


# கட்சி அலுவலகம் சோதிக்கப்பட்டதற்கு
# ஈ.பி.ஆர்.எல்.எவ் கண்டனம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 2

தவறு செய்தவர்கள் யார் என்று தெரியாமல் தமிழ்க் கட்சிகளின் அலுவலகங்களைப் படையினர் சோதனையிடுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். எதிர் காலத்தில் தவறு விடுபவர்களுக்கு எதிராக சட்ட பூர்வமாகச் செயற்படுமாறும் கோருகின்றோம்.

வவுனியாவில் கடந்த 30 ஆம் திகதி தமிழ்க்கட்சிகளின் அலுவலகங்களைச்சுற்றி வளைத்து படையினர் நடத்திய தேடுதல்களைக் கண்டித்து ஈ. பி ஆர். எல். எவ் அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியாவில் கடந்த சில வருடங்களாகப்பலர் கடத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டும் உள்ளனர். சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் கூட இது தொடர்பான முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன— ஆனால் இவை தொடர்பாக இதுவரை எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மை.

எனினும் கடந்த 30 ஆம் திகதி வவுனியாவில் இருக்கும் தமிழ் இயக்கங்களின் அலுவலகங்கள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டன. ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் அலுவலகமும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பு ஜனநாயகப் பாதைக்குத் திரும்பிய பின்னர் எந்த விதமான சட்ட விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. இதனை நாம் மட்டுமல்ல வடக்கு— கிழக்கு மாகாண இன்றைய ஆளுநர் உட்பட வடக்கு— கிழக்கு இராணுவத் தளபதிகளும் பொலீஸ் அதிகாரிகளும் கூட பல தடவை கூறியுள்ளனர். வவுனியாவிலும் சரி ஏனைய இடங்களிலும் சரி நாம் அரசியல்நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறோமே தவிர வேறு எந்தவிதமான இராணுவ நடவடிக்கையிலோ, சட்ட விரோதமான செயல்களிலோ ஈடுபடவில்லை என்பதை நாம் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றோம்.

எமது முகாமைச் சோதனையிடுவதற்கு முன்னர்வவுனியா இராணுவ பிரிகேடியர் எமது வவுனியா மாவட்ட பிரதிநிதிகளை அழைத்துப் பேசினார். அப்போது கூட ஈ. பி. ஆர். எல். எவ் தொடர்பாக எந்த விதமான முறைப்பாடுகளும் இல்லை என்றே அவர் கூறியுள்ளார். அவ்வாறு கூறிய பின்னர் எமது அலுவலகத்தை சோதனையிட இராணுவத்தை அனுப்பியது வேண்டத்தகாத செயலாகும்—

சட்டவிரோத செயல்களுக்கெதிராக சட்டபூர்வமான நடவடிக்கைகளை பொலீஸோ படையினரோ எடுப்பதென்பது வரவேற்கக்கூடியதொன்று. ஆனால் அதனை விடுத்து — யார் குற்றம் செய்தார்கள் என்று தெரியாமல்— அலுவலகங்களை சுற்றி வளைத்து தேடுதல் நடத்துவது என்பது மக்கள் மத்தியில் எல்லா தமிழ் அரசியல் கட்சிகளையும் ஏளனத்துக்குள்ளாக்கும் செயலாகவே நாம் கருதுகின்றோம். இராணுவத்தின் இவ்வாறான முறையற்ற செயல்களை நாம் கண்டிப்பதோடு, எதிர் காலத்திலாவது தவறு இழைப்பவர்களுக்கு எதிராக சட்டபூர்வமாக செயற்படுமாறு கோருகின்றோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)


## இதய அஞ்சலி

திரு. சே. இராசவல்லவன்
(அதிபர், யா/ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம்)
அவர்களின் அன்பு மனைவி
திருமதி
**உருக்குமணிதேவி இராசவல்லவன்**
04 - 03 - 99 வியாழன் அன்று காலமானார்.

திருமதி ஆனந்தி சிவஞானம்
(அதிபர், யா / இராமநாதன் மகளிர் கல்லூரி)
அவர்களின் அன்புத் தாயார்
**புஸ்பலீலாவதி நடராசா**
06 - 03 - 99 சனி அன்று காலமானார்.

திரு. எஸ். நாகையா
(அதிபர், யா / ஆனைக்கோட்டை அ. மி த. க. பாடசாலை)
அவர்களின் அன்பு மனைவி
திருமதி
**பத்மினிதேவி நாகையா**
09 - 03 - 99 செவ்வாய் அன்று காலமானார்.

அனைவருக்கும் எமது இதய அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவர்தம் குடும்பத்தவரின் துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறுகின்றோம்.

அதிபர் சங்கம்,
வலிகாமம் வலயம்,
பிரிவு இரண்டு.

(சி/6999)



வடக்கு - கிழக்கு மாகாணசபைகளுக்குக்
கீழ் மாத்திரம் சேவையாற்ற
**மாணவ தாதிகளை**
தெரிவு செய்வதற்கான
## பரீட்சை - 1999

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி அதில் தகுதி பெற்று தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 10-04-99 அன்று காலை 8-30 (புதிய நேரப்படி) மணியளவில் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணத்தில் எழுத்துப் பரீட்சை நடைபெறவிருப்பதால் எல்லோரும் தவறாது சமூகம் தரவும். அவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படும். முன் குறிப்பிட்டபடி 08-04-99 அன்று நடைபெறமாட்டாது என்பதையும் அறியத் தருகிறோம்.

Dr. (Miss) N KANAGARETNAM
DIRECTOR
General Hospital (Teaching)
Jaffna.

(சி/7007)



## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக இறைச்சிக்கடைகள்
## கேள்வி அறிவித்தல் 1999

01. குத்தகைக்காலம்: 01 - 05 - 1999 தொடக்கம் 31 - 12 - 1999 வரை.
02. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 12 - 04 - 1999 நண்பகல் 12.00 மணி வரை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில்.
03. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி: 13 - 04 - 1999 நண்பகல் 12.00 மணி வரை.
04. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி; 13 - 04 - 1999 பிற்பகல் 2.00 மணி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் தலைமை அலுவலகத்தில்.
05. கேள்விப்பத்திரங்கள் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
06. நிர்ணயிக்கப்பட்ட தொகையிலும் பார்க்க குறைவாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகளின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
07. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் பாத வாடகை | கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட |
|---|---|---|---|---|---|
| பண்டத்தரிப்பு பட்டினம். | | | | | |
| 1. | ஆட்டிறைச்சிக்கடை இல. 1 | 250/- | 1,000/- | 100/- | 25,000/- |
| 2. | ஆட்டிறைச்சிக்கடை இல. 2 | 250/- | 1,000/- | 100/- | 25,000/- |
| 3. | மாட்டிறைச்சிக்கடை இல. 1 | 250/- | 1,000/- | 100/- | 50,000/- |
| 4. | மாட்டிறைச்சிக்கடை இல. 2 | 250/- | 1,000/- | 100/- | 50,000/- |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், ஜே. பி. யூ. எம்.
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்.
01 - 04 - 1999.

(சி/7001)



## கண்ணீர் அஞ்சலி



**சின்னராசா சிவாகரன்**
[களஞ்சியப் பொறுப்பாளர் வி. எஸ். பி. குறூப்]

எமது நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் சின்னராசா சிவாகரன் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம. அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்களும்
ஊழியர்களும்
வி. எஸ் பி. குறூப்.

(சி/ 7015)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 130 கடற்றொழிலாளர்களுக்கு வடமராட்சி வடக்கில் வலைகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2 கனேடிய அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் கெயர் நிறுவனத்தினால்வடமராட்சி வடக்கில் 130 கடற்றொழிலாளர்களுக்கு வலைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம்செய்த கெயர் திட்டப் பணிப்பாளர் டானியல் சின்னத்தம்பி, திட்ட வரைவு மேற்பார்வை மதிப்பீட்டுப் பணிப்பாளர் செல்வி சிற்றோஸி ஆகியோர்மேற்படி பகுதிக்குநேரில்விஜயம்செய்துஇத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த ஆரம்ப வைபவத்தில் பருத்தித்துறைப் பிரதேசச் செயலர் ஏ.சிவசுவாமி, திட்டமிடல் அதிகாரி எஸ். மகேந்திரன், கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் எஸ். ஏ. யோசெப், விரிவாக்கஉத்தியோகத்தர் எஸ். கதிர்காமத்தம்பி, கெயர் செயற்றிட்ட முகாமையாளர் கி. அ. அருள்ஞானம், மீன் பிடித்துறை வள அறிஞர் எஸ். அன்ரனிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மீன்பிடி வலைகள் விநியாகத்தைத் தொடர்ந்து கடற்றொழிலாளர்களுக்கு கட்டுமரங்களும் மற்றும் மீன்பிடி உபகரணங்களும் கெயர் நிறுவனத்தினால் விரைவில் வழங்கப்படவுள்ளன என்று மேற்படி நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமராட்சி கிழக்கில் 4 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக30பேருக்கு கட்டுமரங்களையும் வலைகளையும் வழங்குவதற்குக் கெயர் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

உ

# அமிர்தா

## தொலை தொடர்பு சேவை

பலாலி வீதி, ஊரெழு.

மங்களகரமான ஆரம்ப நாள்:
3-4-99 சனிக்கிழமை காலை 7 மணி

சர்வதேச தொலைத்தொடர்பு சேவை இரவு, பகல் வழங்கப்படும்.

தங்குமிட வசதி இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பா. அமிர்தலிங்கம்

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

(64427)

# கண்ணீர் அஞ்சலி



## சின்னராசா சிவாகரன்

(களஞ்சியப் பொறுப்பாளர், வி. எஸ். பி, குறூப்)

வி. எஸ். பி. குறூப் நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் சின்னராசா சிவாகரன் அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பங்காளரும் ஊழியர்களும்
மகாநதி ரெக்ஸ்
யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

[சி/7004]

# சந்நிதியான் நிகழ்வுகள்

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமானாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு "ஆர் அளக்கவல்லார்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழகம் சிரேஷ்ட போதனாசிரியர் ச. விநாயகமூர்த்தி உரை நிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந்த நிகழ்வில் அறிமுக உரையை பண்டிதர் க. முத்துவேலு நிகழ்த்துவார். [இ-30]

# பரிசளிப்பு விழாவும் திறப்பு விழாவும்

அளவெட்டி தெற்கு அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் புதிய நூலகத்திறப்புவிழாவும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் க. இளமுருகனார் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக வலிகாமம் வலய பிரிவு 3 உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதனும் கலந்து கொள்கின்றனர்.

நூலகத்தை வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் திருமதி ப. திலகநாயகம்போல் திறந்து வைப்பார். [இ-86)

படையினருக்கான

# உணவுப் பொருளுடன் லொறி கடத்தப்பட்டது!

வவுனியா, ஏப்ரல் 2

மன்னாரில் உள்ள இராணுவ முகாமுக்கு உணவுப் பொருள்கள் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மருதங்கடவல என்னும் இடத்தில் வைத்து இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளது.

மதவாச்சி – மன்னார் பாதை ஊடாகச் சென்ற சமயம் இந்த லொறி கடத்தப்பட்டது.

லொறி கடத்தப்பட்ட சமயம் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் லொறியில் இருந்ததாகக் கூறப்பட்டது. (இ-3-21)

# மாணவரை காணவில்லை ஆணைகுழுவில் முறையீடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2 உரும்பிராய்ப் பகுதியில் 17 வயது மாணவன் ஒருவர் காணாமற் போய்விட்டார் என்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாகமுத்து நிர்மலகாந்தன் [உரும்பிராய் கிழக்கு] என்ற மாணவரே காணாமற் போனவராவார்.

இவர் கடந்த 25 ஆம் திகதி தமது வீட்டில் இருந்து வெளியே புறப்பட்ட பின்னர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய வரலாறு குறித்த வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், பல்கலைக்கழக நூலகமும் இணைந்து நூலகக் கேட்போர் கூடத்தில் கல்விசார் வீடியோப் படக்காட்சிளைக் காண்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன.

முதலில் ஆரம்பிக்கப்படவுள்ள கல்விசார் வீடியோப் படக்காட்சி இந்தியாவின் வரலாறு பற்றியதாகும். நாளை சனிக்கிழமை முதல் பிரதி சனிக்கிழமை தோறும்10மணி முதல் 12 மணிமரை 8வாரங்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ள மேற்படி படக்காட்சித் தொடரில் இந்தியத் துணைக் கண்டத்தின் கற்கால வரலாறு, சிந்துவெளி நாகரிகம் என ஆரம்பித்து காந்திய இந்தியா, சுதந்திரத்தின் பின் இந்தியாவின் வளர்ச்சி வரையான விடயங்கள் தமிழ் விளக்கங்களுடன் காண்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுள்ளோர் எவரும் இந்நிகழ்வுக்கு வருகை தர முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தெரிவித்தார். (ஐ)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளர்

## சின்னராசா சிவாகரன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்களும் ஊரியர்களும்
றோயல் வைன் ஸ்ரோர்ஸ்,
96, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7021

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம்
## வலிகாமம், தென்மராட்சி வலயங்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயம் பற்றிய 15 — 03 — 99 ஆம் திகதிய உதயன் நாளிதழில்பிரசுரமான அறிவித்தலின் பால் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

15 — 03 — 1999 ஆம் திகதி பிரசுரமான அறிவித்தலில் யா/வரணி மகா வித்தியாலயத்தில் அமையவுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் வேலைகளுக்கு மட்டும் கேள்விப் பத்திரம் வழங்கல் 99—04—07 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த வேலை சம்பந்தமான கேள்விகள் 99—04—09 ஆம் திகதி காலை 10. 00 மணி வரை யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளன கேள்விப் பத்திரப் பெட்டியிலிடலாமெனவும் 99—04—09 ஆம் திகதி காலை 10. 30 மணிக்குக் கேள்விப் பத்திரம் திறக்கப்படுமெனவும் அறியத் தருகின்றேன்.

வீ. இராசையா
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் வலயம்.

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,
வலயக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
30—03—1999.

(சி/7022)

உ
சிவமயம்

# பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் வெகுதானிய வருடம் பங்குனி மாதம் 20 ஆம் நாள் (3—4—99)
சனிக்கிழமை முற்பகல் 10. 30 தொடக்கம் 12 மணிவரையுள்ள
சுவாதி நட்சத்திரமும் மிதுனலக்கினமும் கூடிய
சுப வேளையில்

எமது கனிஷ்ட புத்திரி
## சுவர்ணமுகி அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழா நடத்த
பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம்
தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை
ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
திரு. திருமதி சிவசாமி

பீலியந்தோட்டம்,
கரணவாய், கரவெட்டி.

(சி/7019)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

(முதலாம் பக்கத்தொடர்)

ஏற்கனவே செம்மணிப் பகுதிக்கு விஜயம் செய்து அங்கு மண் மாதிரிகளை எடுத்துச் சென்ற மண்ணியல் நிபுணரின் அறிக்கை அரச சட்டத்தரணியால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

புதைகுழி தோண்டும் பணியில் ஈடுபடவுள்ள முக்கிய நிபுணரான றுகுணு பல்கலைக்கழக சட்ட மருத்துவத் துறைப் பேராசிரியர் சந்திர சிறி நிரியெல்ல தாம் மேலதிக பயிற்சிக்காக மே மாதம் 5 ஆம் திகதி முதல் மே மாதம் 21 ஆம் திகதிவரை வெளிநாடு செல்ல இருப்பதாகவும் —

அதற்கு முன்னர் புதைகுழியைத் தோண்டி முடிப்பதற்கு இயலாது என்பதால் தோண்டும் நடவடிக்கையைத் தாமதப்படுத்துமாறும் — நீதிமன்றத்தில் கோரினார்.

இதனையடுத்து ஜூன் மாதம் 16 ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்த நீதிவான் யாழ். நீதிமன்றத்தில் அன்று இந்த விடயம் எடுக்கப்படும் போது செம்மணியில் உள்ளதாகக் கூறப்படும் மனித புதைகுழிப் பகுதியைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தார்.

மனிதப் புதைகுழி இருப்பது பற்றிய தகவலை வெளியிட்ட — கிருஷாந்தி குமாரசாமி படுகொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவக் கோப்ரல் சோமரத்தின ராஜபக்ஷவை மனிதப் புதைகுழி அமைந்துள்ளதாகக் கூறப்படும் இடத்தை அடையாளம் காட்டுவதற்காக ஜூன் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றும்படியும் —

அவருக்கு தேவையான பாதுகாப்பு வழங்கும் படியும் —

அவரை ஜூன் 16 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படியும் — சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

புதைகுழி தோண்டும் விடயத்தில் சர்வதேச நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

செம்மணியில் விசாரணையாளர்கள் விசாரணை மேற்கொண்ட பிரதேசத்தை அளந்து வரைபடம் தயாரிக்குமாறு வடமாகாண நில அளவைத் திணைக்களப் பணிப்பாளருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

புதைகுழி தோண்டும் நடவடிக்கை ஆரம்பமாகும் தினத்துக்கு முன்னர் காணாமற் போனோர் பற்றிய பூர்வாங்க விசாரணைகள், காணாமற்போன பின்னர் செம்மணியில் புதைக்கப்பட்டிருப்பதாக கருதப்படுவோர் பற்றிய விவரங்கள், அவர்கள் கடைசியாக அணிந்திருந்த உடைகள், ஆபரணங்கள், அணிகலன்கள், மணிக்கூடுகள் ஆகியவை பற்றிய விவரங்களை அவர்களின் உறவினர்களை விசாரித்து பதிவுசெய்து கொள்ளும்படி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

[இ-உ-3]

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்)

இளம் மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி, அவரது தாயார், தம்பியார் மற்றும் அயலவர் ஆகியோரின் சடலங்கள் இப்பகுதியில் புதைக்கப்பட்ட பின்னர் நீதிமன்ற கண்காணிப்பில் தோண்டி எடுக்கப்பட்டன. இந்தத் தோண்டுதல் நடவடிக்கையினால் மண்ணின் இயற்கை நிலையில் ஏற்பட்ட குழப்பமே மண்ணியில் நிபுணர்களின் அறிக்கையில் பிரதிபலித்திருக்கக் கூடும் என்று அரச சட்டத்தரணி கோத்தாகொட நீதிமன்றில் தெரிவித்தார்.

எனினும் அப்பகுதியில் உள்ள புற்கள், பூண்டுகள் அண்மையில் அங்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பின்னர் முளைத்தனவா? அல்லது மனித சடலங்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட காலத்திலிருந்தே காணப்படுபவையா என்பதை ஆராய்ந்தால் மனித சடலங்கள் புதைக்கப்பட்ட பின்னர் அப்பகுதியின் மண் நிலைமையை மாற்ற நடவடிக்கைஏதும்எடுக்கப்பட்டதா என்பதை ஓரளவு அறிந்து கொள்ள முடியும் என்று விசாரணையாளர் குழுவினால் நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் தமது பிரசன்னம் இன்றியே தாவரவியல் நிபுணர்களை அப்பகுதிக்குக் கூட்டிச் சென்று அங்குள்ளபுல் பூண்டுகளை ஆராய்ந்து நிபுணத்துவ அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு விசாரணையாளர் குழுவுக்கு அனுமதி அளித்து நீதிமன்றத்தில் அந்த அறிக்கையை சமர்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-உ-3)

## குடா நாட்டில்...

(முதலாம் பக்கத்தொடர்)

இவர் சுமார் ஒருவருட காலத்தின் பின்னர் நேற்று அதிகாலைவீட்டிலேயேமரணமானார்.

இவரதுமனைவியும் எய்ட்ஸ் நோயின் தாக்கத்திற்குள்ளாகியிருப்பதாகப் பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இதேவேளை இலங்கையின் 8 ஆவது எய்ட்ஸ் நோயாளியும், குடாநாட்டின் முதலாவது எய்ட்ஸ் நோயாளியும் எனக் கண்டு பிடிக்கப்பட்டவரின் மனைவி எய்ட்ஸ் காரணமாக இருமாதங்களுக்கு முன் தமது வீட்டில் மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட எய்ட்ஸ் பரிசோதனையின்போது இவர் எய்ட்ஸ் நோயின் தாக்கத்துக்குள்ளாகி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இவரின் கணவர் 1989 ஆம் ஆண்டு எய்ட்ஸ் நோய் காரணமாக மரணமடைந்தார்.

இவர்களுடன் மொத்தம் நான்கு பேர் குடாநாட்டில் எய்ட்ஸ் நோயினால் மரணமடைந்துள்ளனர். (இ-15)

## தாக்குதலில்...

(முதலாம பக்கத் தொடர்)

படையினருக்கும் — கிராமவாசிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பு ஒன்றைத் தொடர்ந்து கொண்டைவெட்டுவான் இராணுவ முகாமில் இருந்து வந்த படையினர் இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்று கிராமவாசிகள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

## ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்)

திகதி முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

நேற்று நீதிவான்முன் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவரை 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் கையொப்பம் இடும் படியும் –

இவரின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் படியும் உத்தரவிட்டார்.

(இ-3-21)

இப்பத்திரிகை நியூஉதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கிராமசேவையாளருக்கு தொழில்துறைசார் பயிற்சி

## ஐ. நா. அபி. திட்டம் வழங்குகிறது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

கிராமசேவையாளர்களுக்கு தொழில்துறைசார் பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றை ஐ.நா. அபிவிருத்தித்திட்டம் ஆரம்பித்துள்ளது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக சகல கிராம சேவையாளர்களுக்கும் மேற்படி பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பயிற்சித் திட்டத்தின் கீழ் முதல் தொகுதி கிராம சேவையாளர்களுக்கான பயிற்சிநெறி கடந்த 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி வகுப்பில் நல்லூர், கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து முதல் தடவையாகத் தெரிவு செய்யப்பட்ட 45 கிராம சேவையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இரண்டாவது அணியினருக்கான பயிற்சி வகுப்பு அடுத்த மாதம் 24 ஆம் திகதி முதல் இரு தினங்களுக்குத் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## ஆலய புனரமைப்பு ஆரம்பம்

தென்மராட்சி ஏப்ரல். 2

மறவன்புலோபழைய முத்துமாரி அம்பாள் ஆலயத் திருப்பணி வேலைகள் நீண்ட நாள்கள் இடைவெளிக்குப் பின்னர் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பழைமை வாய்ந்த ஆலய கட்டட புனரமைப்பு தொடர்பாக இப்பகுதி கிராம அலுவலர் மேற்கொண்ட முயற்சியினால் சோ. அருளம்பலம் தலைமையில் திருப்பணிசபை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் ஆலய திருப்பணி வேலைகளுக்கென 40 ஆயிரம் ரூபாவை திருப்பணிச் சபைத் தலைவரிடம் அன்றைய தினம் ஒப்படைத்ததை அடுத்து புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதாகத் கிராம அலுவலர் தி. மகாலிங்கம் தெரிவித்தார். (ஐ117)

## ஏப்ரல் பூல் விளையாட்டு: மூவர் காயமடைந்தனர்

நெல்லியடி, ஏப்ரல். 2

''ஏப்ரல் பூல்'' விளையாட்டு விபத்தில் முடிவடைந்து மூவர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இமையாணன் பகுதியில் இடம்பெற்றது.

வீதியில் நின்ற சிலர், அப்பகுதியால் சென்றோர் மீது மையைத் தெளித்தனர் என்றும்—

அந்த வேளையில், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வேறொரு சைக்கிளுடன் மோத நேரிட்டது என்றும் — தெரிவிக்கப்படுகிறது

மோட்டார் சைக்கிளில் வந்த இந்திரபுரம், முகமாலையைச் சேர்ந்த வேதாரணியம் - சிவபோகராசா (வயது 30) வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (வயது 55) ஆகிய இருவரும் தலையில் படுகாயமடைந்து மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த விபத்தில் காயமடைந்த மற்றொருவரான, கரணவாய் தெற்கைச் சேர்ந்த செ. சிவனேஸ்வரன் (வயது 20) தலையில் காயத்துடன் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(இ-109)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டுள்ளதாவது:-

பிரதேச செயலர்களுக்கு காணிச் சுவீகரிப்பு, காணிகளுக்கு பெயர் மாற்றல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரம் உண்டு. அவர்களின்ஆட்சியில் தமிழ் மக்களின் காணிகள் பல சுவீகரிக்கப்பட்டன.

உள்ளூராட்சிச் சபைகள் கலைக்கப்பட்டு பிரதேச செயலர்களிடம் அதன் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டால் தமிழர்கள் தமது காணிகளை இழக்க நேரிடும்.

இந்தத் நிலையை தவிர்க்க மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகம் ஒப்படைக்க வேண்டும்— என்றுள்ளது.

(இ-3)

## கொழும்பில்...

[முதலாம் பக்கத் தொடர்]

நியாயாதிக்க எல்லைக்குள் வைத்து அவர் விசாரிக்கலாம் என்று அரச சட்டத்தரணி ஜஸந்த கோத்தாக்கொட வாதிட்டார்.

அந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிவான் இந்தத் தடவை மட்டும் இந்த விடயத்தைக் கொழும்பில் விசாரிப்பதாகவும் அடுத்த தவணையிலிருந்து அது யாழ். நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்படும் என்றும் அறிவித்தார்.

கடந்த 26ஆம் திகதி இது தொடர்பான விடயம் யாழ் நீதிமன்றத்தில் எடுக்கப்படாமைக்கான காரணத்தைப் பதிவு செய்ய விரும்புவதாக அரச சட்டத்தரணி நீதிவானிடம் விண்ணப்பித்தார்.

தங்களின் காரணத்தைப் பதிவதாயின் தனது நிலைப்பாட்டையும் பதிவு செய்ய வேண்டி ஏற்படும் என நீதி... தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இருவரின்நிலைப்பாடுகளும்பதியப்பட்டன. [இ-3]

## உணவின் தரம் குறித்து கைதிகள் முறையீடு

காங்கேசன்துறைத் தடுப்பு முகாமிலுள்ள கைதிகளுக்குத் தரமான உணவு வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இந்த முகாமுக்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கத்திடம் இது தொடர்பாக கைதிகள் முறையிட்டுள்ளனர்:

மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் முகாமுக்கு விஜயம் செய்யும் நாள்களில் மட்டும் தமக்குத் தரமான உணவு வழங்கப்படுவதாகவும் கைதிகள் தெரிவித்தனர்.

கைதிகளின் இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து காங்கேசன்துறையிலுள்ள உதவிப் பொலீஸ் அத்தியட்சகரை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி சந்தித்துக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு குறித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து கைதிகளுக்குத் தரமான உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிக்குத் தெரிவித்தார். [இ-5]

## மெய்வல்லுநர் போட்டி

கொக்குவில் நாமகள் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் பொ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியனும் கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்விவலய உதவிப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன், ஓய்வுபெற்ற அதிபர் வே. திருநாவுக்கரசு ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் வி. முருகேசு யாழ்.வலய ஆசிரிய ஆலோசகர் வே. கைலைநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர்.


## கண்ணீர் அஞ்சலி



### சின்னராசா சிவாகரன்

[களஞ்சியப் பொறுப்பாளர், வி. எஸ். பி. குறூப்]

எமது சக நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் சின்னராசா சிவாகரன் அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்களும்
ஊழியர்களும்.

ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7014)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org